காரைக்குடி கம்பன் கழகப் பவள விழா நிறைவை ஒட்டி
கம்பன் தமிழாய்வு மையம் நடத்தும்

# உலகத் தமிழாய்வுக் கருத்தரங்கம்

## "துறை தோறும் கம்பன்"

# INTERNATIONAL RESEARCH CONFERENCE

## "KAMBAN IN ALL SPHERES"



நாள் : **15 & 16 மார்ச், 2014**

இடம் : **கம்பன் மணி மண்டபம்,** காரைக்குடி - 630 001

**ORGANISED BY KAMBAN TAMIL RESEARCH CENTRE**
KARAIKUDI - 630 001


**கம்பன் தமிழாய்வு மையம், கம்பன் மணி மண்டபம்,**
**காரைக்குடி – 630 001.**

e-mail : kambantamilcentre@gmail.com
Mobile : +91 94450 22137
blog (வலைப்பூ) : kambantamilcentre.blogspot.in


"என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொள்வோம் !"

*கம்பன் தமிழ் ஆய்வு மையம்*

*கம்பன் கழகம், காரைக்குடி*
நிறுவனர் : கம்பன் அடிப்பொடி சா. கணேசன்
நிறுவியது : 1939

# உலகத் தமிழாய்வுக் கருத்தரங்கம்
## "துறை தோறும் கம்பன்"

பேரன்புடையீர்,

வணக்கம். 1939ஆம் ஆண்டு கம்பனடிப்பொடி சா. கணேசனாரால் தொடங்கப்பெற்ற காரைக்குடிக் கம்பன் கழகம், எந்த ஒரு இலக்கிய அமைப்பின் சரித்திரத்திலும் நிகழ்ந்திராத வண்ணம், தொடர்ந்து எழுபத்தி ஐந்து ஆண்டுகள் கவிச்சக்கரவர்த்தி கம்பன் திருநாளைக் கொண்டாடி கன்னித் தமிழ் வளர்ப்பதில் தன் சேவையைச் செய்து வந்துள்ளது மாபெரும் சாதனையாகும்.

1989ல் நிகழ்ந்த கம்பன் திருநாள் பொன்விழாவை ஒட்டி தில்லியிலிருந்து முதன் முதலில் தமிழகத்திற்கு சாகித்திய அகாதெமியினரை அழைத்து வந்து அகில இந்திய இராமாயண மாநாடு ஒன்று வெற்றிகரமாக இரண்டு நாட்கள் நடைபெற்றது. **2013 மார்ச் மாதம் 21 முதல் 27 வரை வெகு விமரிசையாக நிகழ்ந்த கம்பன் திருநாளின் ஒரு வாரப் பவள விழாவை** ஒட்டி 'காலம் தோறும் கம்பன்' என்ற உலகத் தமிழ்க் கருத்தரங்கம் 2013 மார்ச் 23 & 24 தேதிகளில் 226 அறிஞர்கள், ஆய்வாளர்கள் உலக முழுவதிலுமிருந்து பங்கேற்க சிறப்பாக நடத்தப் பெற்றது.

பவள விழா நிறைவை ஒட்டி '**துறை தோறும் கம்பன்**' எனும் **உலகத் தமிழ் கம்பராமாயண ஆய்வுக் கருத்தரங்கம் 2014 மார்ச் 15, 16** தேதிகளில் கூட்டப்பெறுகிறது. இப் பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாக நிகழ்ந்திடவும், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்து தம் ஆய்வு முடிவுகளால் செந்தமிழ்ப் பணியில் பங்கேற்று செம்மொழித் தமிழைச் சீராட்டிடவும், உலகெங்கிலும் உள்ள தமிழ்ப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், சுவைஞர்கள் எல்லோரையும் இரு கரம் கூப்பி இனிப்புடன் தமிழ் கூறி வரவேற்கிறோம்; வந்து கலந்து மகிழ்ந்து, மகிழ்வித்து கண்டனைய, மண்டு புகழ், வண்டமிழ்ப் பணி ஆற்றிடுக! தண்டமிழ் தழைத்திடச் செய்திடுக!!

தமிழ்ப் பணியில்,
உங்கள் பணிவன்புள்ள

காரைக்குடி
12-10-2013

*கம்பன் தமிழ் ஆய்வு மையத்தினர்*

...... பணிகள் ......

- கம்பனின் இராமாவதாரக் காப்பியத்தால் பெரிதும் ஈர்க்கப் பெற்று காரைக்குடியில் 1939 ஏப்ரில் 2, 3 ஆகிய நாட்களில் ரசிகமணி டி.கே.சி தலைமையில் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் தம் வாழ்நாள் வேள்வியைத் தொடங்கினார் சா. கணேசன் எனும் காந்தியடிகளின் தொண்டர். காரைக்குடி யிலிருந்து 30 கல் தொலைவில் உள்ள நாட்டரசன்கோட்டையில் உள்ள கம்பன் சமாதிக் கோயில் வளாகத்தில் கம்பன் தன் இராமாவதாரத்தை அரங்கேற்றிய பங்குனி அத்தத் திருநாளிலும், அதற்கு முந்திய மூன்று நாட்களான பங்குனி மகம், பூரம், உத்திரம் ஆகிய நாட்களில் காரைக்குடியிலும் கம்பன் திருநாளைக் கொண்டாடினார்.
- கம்பன் பிறந்த நாளை நாம் அறிய, சான்று ஏதும் கிடைக்காததால், அவன் தன் இராமாவதாரக் காப்பியத்தை அரங்கேற்றியதாக தனிப்பாடல் ஒன்றின் துணையால் அறிய நேர்ந்த நாளையே (கி.பி. 886, பிப்ரவரி 23ம் தேதி புதன்கிழமை பங்குனி அத்த நாள்) கம்பன் கவிச் சக்கரவர்த்தியாக இப்பூவுலகில் அவதரித்த நாளாகக் கொண்டு கொண்டாடி வந்தார்.
- சாதி, மத, பதவி, அரசியல் சார்பு பேதமற்று தமிழ்கூறு நல்லுலகத் தலை சிறந்த அறிஞர்கள் எல்லோரும் பங்கேற்ற தமிழ் இலக்கிய விழா இஃதொன்றே.
- ஆண்டு தவறாது 44 ஆண்டுகள் தொடர்ந்து கம்பன் அடிப்பொடி சா. கணேசன் தம் வாழ்நாள் (1982) வரை கொண்டாடினார். 1983 முதல் அவர் விரும்பியவண்ணமே அவர்தம் தலைமாணாக்கரான திரு கம்பன் அடிசூடியை செயலாளராகக் கொண்டு அதே முறையில் தொடர்ந்து 31 ஆண்டுகளாக நடத்தி வந்து 2014ல் கம்பன் திருநாள் பவள விழா நிறைவு கொண்டாடப்பெற உள்ளது.
- ஆண்டுதோறும் கம்பராமாயணத்தில் புதிய கூறு ஒன்றைப் பற்றி அறக்கட்டளை ஆய்வுப் பொழிவுகள் தற்போது நிகழ்த்தப் பெறுகின்றது: இதுவரை 'தாய் தன்னை அறியாத....', 'கம்பனின் மனவளம்', 'கம்பனில் எண்ணமும் வண்ணமும்', 'கம்பனில் நான்மறை', 'கம்பர் காட்டும் உறவும் நட்பும்', 'கம்பர் போற்றிய கவிஞர்', 'கம்பனின் அம்பறாத் தூணி', 'கம்பன் காக்கும் உலகு', 'கம்ப வானியல்' என்பன நூல்களாக்கப் பெற்று அந்த அந்த ஆண்டே வெளியிடப் பெற்றுள்ளன. 2013ல் நிகழ்ந்த உலகத் தமிழ்க் கருத்தரங்கில் அளிக்கப் பெற்ற 226 அறிஞர்களின் கட்டுரைகளும், 'காலமும் கணக்கும் நீத்த காரணன் கம்பன்', 'காசில் கொற்றத்துக் கவிச் சக்கரவர்த்தி கம்பன்', 'வேறுள குழுவையெலாம் வென்ற மானுடன் கம்பன்', என்று 1328 பக்கங்கள் கொண்ட 3 நூல்களாய் வெளியிடப் பெற்றுள்ளன.

- மாதந்தோறும் முதற் சனிக்கிழமைகளில் அறிஞர் ஒருவரோடு, இளந்தலைமுறையினர் ஒருவரைக் கொண்டும் புதிய கோணங்களில் கம்பன் காவியம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்கின்றன.
- கம்பன் உள்ளிட தொல்காப்பியர் முதல் கண்ணதாசன் வரையிலான இலக்கிய வளங்களை கற்க ஓர் ஆய்வு / மேற்கோள் நூலகம் ஏற்படுத்தி, அவற்றைக் கற்பிக்கவும், ஆய்வு நிகழ்த்துவோருக்கான பணியிட வசதி செய்து, நெறிப்படுத்தி, ஆய்வுகளை ஊக்கப்படுத்தவும் முயற்சிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

## நூலாசிரியர்கள் / பதிப்பாளர்கள் கவனத்திற்கு

***1-1-2013 முதல்***
***31-12-2013 வரை***

*வெளியிடப்பெற்ற கம்பன் / கம்பராமாயணம் குறித்த தமிழ் / ஆங்கில மொழி ஆய்வு நூல்களின் ஆசிரியர்கள் / பதிப்பகத்தார், நூலின் மூன்று பிரதிகளை பதிவுக் கட்டணம் ரூ. 100/$ 10 உடன் சேர்த்து 15-01-2014 ஆம் நாளுக்குள் கிடைக்கும்படி காரைக்குடி கம்பன் தமிழ் ஆய்வு மையத்திற்கு அனுப்பித் தந்தால், இதற்கென இசைந்துள்ள தமிழ் மூதறிஞர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெறும் இரு நூல்களின் ஆசிரியர்க்கும், பதிப்பாளர்க்கும் முறையே ரூ. 5,000/- / ரூ. 2500/-, சங்க இலக்கியங்களையும், திருமந்திரத்தையும் நேர்த்தியாய்ப் பதிப்பித்த கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள் நினைவு சிறப்புப் பரிசாக வழங்கப்பெற்று, கருத்தரங்கில் பாராட்டும் செய்யப்பெறும்.*

## பேராளர் கட்டணம்

| | | |
|---|---|---|
| உள்நாட்டுப் பேராசிரியர்/பேராளர்/சுவைஞர் : | | ரூ. 750/- |
| வெளிநாட்டுப் பேராளர்/ஆய்வாளர் | : அமெரிக்க $ | 50/- |
| வெளிநாட்டு சுவைஞர் | : $ | 25/- |

இக்கட்டணங்கள் காரைக்குடியில் மாற்றத் தக்க (Crossed Bank Demand Draft) குறுக்குக் கோடிட்ட வங்கி வரைவோலையாக "KAMBAN TAMIL RESEARCH CENTRE" என்ற பெயருக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.

பதிவுப் படிவமும், ஆய்வுக் கட்டுரையும், கட்டணமும்
15-01-2014ஆம் தேதிக்குள்
காரைக்குடி அலுவலகத்திற்கு வந்தடைய வேண்டும்.

(படிவத்தினை படிகள் எடுத்தும் அனுப்பலாம்)

## நெறி முறைகள் :

- பல்கலைக்கழகம், கல்லூரி, நிறுவனம் சார்ந்த பேராசிரியர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரையுடன், கல்லூரி / நிறுவன முழு முகவரி, தொலைபேசி எண் / அஞ்சல் குறியீட்டு எண் விவரங்களை இணைத்தே அனுப்பி உதவிடுக.
- ஆய்வு மாணாக்கர் / பேராளர் தம் நெறியாளர் பரிந்துரையும் பதிவுப் படிவமும் இல்லாத ஆய்வுக் கட்டுரைகள் ஏற்கப் பெறா.
- மேற்குறித்த கல்வி நிறுவனம் எதனையும் சாராத தமிழ் ஆர்வலர்களும் / இலக்கியச் சுவைஞர்களும், கம்ப நேயர்களும் தங்கள் பகுதி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரின் அல்லது கம்பன் கழகத் தலைவரின் / செயலாளரின் முத்திரையுடன் கூடிய பரிந்துரையோடு கட்டுரைகளை அனுப்பலாம்; கட்டுரைகள் அனுப்பாத இலக்கியச் சுவைஞர்கள் தம்மை ஒரு சுவைஞர் – பேராளராக கட்டணம் செலுத்தி, பதிவு செய்து இருநாட்களும் பங்கேற்று மகிழலாம்; இன்தமிழ்ச் சுவை பருகி ஏற்றமிகு தமிழ் வளர்த்த பெருமை பெறலாம்.
- ஆய்வுக் கட்டுரைகள் முற்றிலும் பேராளார்களின் சொந்தப் படைப்பாகவே இருத்தல் வேண்டும். கண்டிப்பாக பிறர் படைப்புக்களைத் தழுவியதாகவோ, கையாடியதாகவோ இருத்தல் கூடாது. கூறப்பெறும் ஆய்வுக் கருத்துக்கள் / முடிவுகளுக்கு கட்டுரையாளரே பொறுப்பாவார்.
- ஆய்வுக் கட்டுரைகளை ஏ4 தாளில் இருவரி இடைவெளியுடன் UNICODE எழுத்துருவில், ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், கணினிவழி ஒளியச்சு செய்து, மின்னஞ்சல் வழி / குறுவட்டு வடிவில் அனுப்ப வேண்டும். முடிந்த அளவு பிறமொழிக் கலப்பற்றதாய் இருத்தல் வேண்டும். கையெழுத்துப் படிகள் கண்டிப்பாய் ஏற்கப் பெறா.
- ஆய்வுக் கட்டுரைகள், மதிப்பிடு வல்லுனர் / அறிஞர் குழுவின் ஏற்பினைப் பெற்று, கம்பன் தமிழ் ஆய்வுக் கோவையாக நூல் வடிவில் ISBN எண்ணுடன் அச்சிடப் பெற்று கருத்தரங்கில் பேராளர் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி வழங்கப்பெறும்.
- தேர்ந்தெடுக்கப் பெற்ற கட்டுரைகளில் அத்தகு வல்லுனர் / அறிஞர் குழுவின் சிறப்புப் பரிந்துரை / முத்திரை பெறும் பத்துக் கட்டுரையாளர்க்கு சிறப்புப் பரிசுகள் கருத்தரங்கில் வழங்கப்பெற்று கௌரவிக்கப் பெறுவர்.
- கருத்தரங்கிற்கு நேரில் வரும் பேராளர்க்கு மட்டுமே பங்கேற்புச் சான்றிதழ், இவ்வாய்வுக் கோவைப் பிரதி, பிற வெளியீடுகள், இன்னபிற பயன்தரு பொருட்களும் வழங்கப்பெறும்.
- பேராளர்க்கு இருநாட்களும் உணவும், ஆடவர் / மகளிர்க்குத் தனித் தனியே பொதுத் தங்குமிட படுக்கை வசதியும் கொடுக்கப்பெறும். தனி அறை / பகிர் அறை வசதி வேண்டுவோர், முன்கூட்டியே தெரிவித்து அதற்குரிய கட்டணம் செலுத்தினால் அவ்வசதி செய்து தரப்பெறும்.
- மேற்கோள் பாடல்களின் எண்ணையும், அடிகளையும் / பிற துணை நின்ற நூல்களின் விவர, பக்க அடிக்குறிப்புகளையும் அவசியம் ஆங்காங்கே குறிப்பிட வேண்டுகிறோம். பின்குறிப்பாகத் தர வேண்டாம்.
- தேர்ந்தெடுக்கப் பெறாத கட்டுரைப் பிரதிகள் எக்காரணங் கொண்டும் திருப்பி அனுப்பெறா. தேர்ந்தெடுக்கப் பெறாக் கட்டுரைகளுக்குரிய பேராளர் கட்டண வரைவோலைகள் 15-02-2014ம் தேதிக்குள் உரியவர்க்குத் திருப்பி அனுப்பப் பெறும்.

# ஆய்வுத் தலைப்புகள்

## *பகுப்பு 1 : கம்பனில் காணலாகும் கலைத் துறைகள்*

கம்பனில் மொழியியல் (PHILOLOGY)
கம்பனில் யாப்பியல் (PROSODY)
கம்பனில் சந்த இயல்
கம்பனில் வண்ணங்கள் இயல்
கம்பனில் சொல்லாக்க இயல் (ETYMOLOGY)
கம்பனில் நாடக இயல் (DRAMATURGY)
கம்பனில் கற்பனையியல்
கம்பனில் விருத்தக் கவி இயல்
கம்பனில் முத்தமிழ்த் துறை வித்தகவியல்
கம்பனில் இசையியல் (MUSICOLOGY)
கம்பனில் இலக்கியக் கூறு இயல்
கம்பனில் உத்தியியல்
கம்பனில் கவின் கலையியல் (FINE ARTS)
கம்பனில் அழகியல் (AESTHETICS)
கம்பனில் செவ்வியல் (CLASSICISM)
கம்பனில் ஓவிய இயல் (PAINTING TECHNOLOGY)
கம்பனில் தோற்றப் பொலிவியல் (CALISTHEMICS)
கம்பனில் வில்வித்தைக் கலை (ARCHERY)
கம்பனில் போர்க்கலையியல் (ART OF WAR)
கம்பனில் மேலாண்மையியல் (MANAGEMENT SCIENCE)
கம்பனில் வரலாற்றியல்
கம்பன் - தோயாத் துறையிலாத் தோன்றல்

## *பகுப்பு 2 : கம்பனில் அறியலாகும் அறிவியல் துறைகள்*

கம்பனில் அறிவியல் அருமைகள் (CONCEPTS OF SCIENCE)
கம்பனில் சுற்றுச்சூழல் இயல் (ECOLOGY)
கம்பனில் தாவரவியல் (BOTONY)
கம்பனில் உயிரியல் (BIOLOGY)
கம்பனில் விலங்கியல் (ZOOLOGY)
கம்பனில் மானுட - விலங்கு தொடர்பியல் (ANTHRO - ZOOLOGY)
கம்பனில் விலங்கு வாழ்க்கைச்சூழல் கலை (ZOONOMY)
கம்பனில் உயரியவற்றை விலங்குருவிற் காட்டும் கலை (ZOOMORPHISM)
கம்பனில் உடல் இயங்கியல் (PHYSIOLOGY)
கம்பனில் உடற் கூறியல் (ANATOMY)
கம்பனில் பறவையியல் (ORINTHOLOGY)
கம்பனில் இயற்பியல் (PHYSICS)
கம்பனில் வேதியியல் (CHEMISTRY)
கம்பனில் மருத்துவ அறிவியல் (MEDICAL SCIENCE)
கம்பனில் மருந்தியல் (PHARMACOLOGY)

கம்பனில் வானியல் (ASTRONOMY)
கம்பனில் விண்வெளி இயல் (AERONAUTICS)
கம்பனில் நீர் மேலாண்மையியல்
கம்பனில் சோதிடக் கலையியல் (ASTROLOGY)
கம்பனில் மெய்யியல் (PHILOSOPHY)
கம்பனில் மூதாதை மரபு வழி இயல் (GENEALOGY)
கம்பனில் மரபுவழிப் பண்பியல் (GENETICS)
கம்பனில் மண்ணியல் (GEOLOGY)
கம்பனில் நிலவியல் (GEOGRAPHY)
கம்பனில் வேளாண்மையியல் (AGRONOMICS)

## பகுப்பு 3 : கம்பனில் புலப்படலாகும் புத்தியல் துறைகள்

கம்பனில் இறையியல் (THEOLOGY)
கம்பனில் பிரபஞ்சயியல் (COSMOLOGY)
கம்பனில் குறியீட்டியல் (SCIENCE OF SYMBOLISM)
கம்பனில் உளவியல் (PSYCHOLOGY)
கம்பனில் அரசியல் கலை (POLITICAL SCIENCE)
கம்பனில் ராஜதந்திரம் (DIPLOMACY)
கம்பனில் ஆட்சியியல் (ADMINISTRATION)
கம்பனில் வாழ்வியல் (ART OF LIVING)
கம்பனில் கல்வியியல் (SCIENCE OF EDUCATION)
கம்பனில் தகவல் தொடர்பியல் (COMMUNICATION)
கம்பனில் மக்கள் தொடர்பியல் (PUBLIC RELATIONS)
கம்பனில் பெண்ணியம் (FEMINISM)
கம்பனில் தொழிற்பணி மேலாண்மையியல் (PROFESSIONAL MANAGEMENT)
கம்பனில் கூட்டு முயற்சியியல் (TEAM EFFORT)
கம்பனில் குறிக்கோள் திட்ட இயல் (MISSION)
கம்பனில் அதிகார ஓம்படை (DELEGATION)
கம்பனில் திட்டமிடும் கலையியல் (TACTICS AND STRATEGY)
கம்பனில் சமுதாயப் பொறுப்புணர்வியல் (SOCIAL COMMITMENT)
கம்பனில் தலைமைப் பண்பியல் (LEADERSHIP)
கம்பனில் மக்கள் கருத்துரையியல் (PUBLIC OPINION)
கம்பனில் போட்டியில் விஞ்சும் மதிக்கூர்மையியல் (COMPETITIVE EDGE)
கம்பனில் கட்டிட நிர்மாணக் கலையியல் (ARCHTECTURE)
கம்பனில் அரசு கடைப்பிடிக்கத்தக்க மரியாதை முறையியல் (PROTOCOL)
கம்பனில் மனித இன நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் (ANTHROPOLOGY)
கம்பனில் புத்தேளிர்க்கு 'மனிதப் பண்பேற்றுதல்' (ANTHROMORPHISM)

கம்பனில் நீங்கள் காணும் இவை போன்ற புதிய பொருண்மைகளிலும் கட்டுரைகள் அமையலாம். ஆங்கிலத்திலும் அமையலாம்.

## “துறை தோறும் கம்பன்” பன்னாட்டுக் கருத்தரங்கம்
## பதிவுப் படிவம்

1. பெயர் : தமிழில் :

ஆங்கிலத்தில்
(In CAPITAL Letters) :

(அடையாள அட்டையிலும், ஆய்வுக் கோவையில் கட்டுரையாளர் பெயராகவும் எப்படிக் குறிப்பிட வேண்டுமோ அப்படியே)

2. கல்வித் தகுதி :

3. தற்போதைய பணி :

4. பணியிட முழு முகவரி :

அ.கு.எண் :
மாவட்டப் பெயர் : நாடு :
STD எண் : தொ.பே. எண் :

5. இல்ல முகவரி :

அ.கு.எண் :
மாவட்டப் பெயர் : நாடு :
STD எண் : தொ.பே. எண் :
கைபேசி எண் : மின்னஞ்சல் முகவரி :

.................................................................................................................. ஆகிய நான்

..................................................................................................................................

என்னும் தலைப்பில் படைத்துள்ள ஆய்வுக் கட்டுரையைக் கருத்தரங்க நாளில் நேரில் வந்து சமர்ப்பிக்க இசைவளித்து, பேராளர் கட்டண வரைவோலையை இணைத்து அனுப்பியுள்ளேன்; கருத்தரங்க விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிப்பேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

6. வரைவோலை வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

நாள் :

கையொப்பம்